RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-347 | 13 டிசம்பர் | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## நடிகர் ரஜினிகாந்த்துக்கு முதல்வர் ஸ்டாலின் மற்றும் பிரபலங்கள் பிறந்தநாள் வாழ்த்து

சென்னை, டிச.13

நடிகர் ரஜினிகாந்த்துக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில், "எல்லைகள் கடந்து ஆறிலிருந்து அறுபது வரை அனைவரையும் தன்னுடைய நடிப்பால் ஸ்டைலால் ரசிகர்களாக்கிக் கொண்ட அருமை நண்பர் 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் அவர்களுக்கு என் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்! திரையுலகில் தொடர் வெற்றிகளைக் குவித்து வரும் தாங்கள், எப்போதும் அமைதியோடும் மன மகிழ்ச்சியோடும் திகழ்ந்து மக்களை மகிழ்வித்திட விழைகிறேன்" என தெரிவித்துள்ளார்.

அதிமுக பொதுச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி, "தன் தனித்துவமான நடிப்பாற்றலால் உலகளாவிய ரசிகர் பட்டாளம் கொண்டவரும், என்றும் பழகுவதற்கு இனியவருமான அன்பு நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்துக்கு எனது இதயங்கனிந்த பிறந்தநாள் நல்வாழ்த்துகள். திரையுலக வாழ்வில் பொன்விழா ஆண்டில்



உள்ள அன்பு நண்பர் ரஜினிகாந்த், இன்னும் பல்லாண்டு பூரண உடல் நலத்துடன் ரசிகர்களை மென்மேலும் மகிழ்விக்க வாழ்த்துகிறேன்" என குறிப்பிட்டுள்ளார். ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "என் அன்பு நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்துக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்! அவர் நல்ல ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும் இருக்கவும், அவரது அனைத்து முயற்சிகளிலும் வெற்றி தொடரவும் வாழ்த்துகள்" என கூறியுள்ளார்.

முன்னாள் ஆளுநரும் பாஜக மூத்த தலைவருமான தமிழிசை சவுந்தரராஜன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், "சகோதரர் ரஜினிகாந்த்துக்கு எனது மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள். கடவுள் அவருக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும் அனைத்து மகிழ்ச்சியையும் அளிக்கட்டும்" என தெரிவித்துள்ளார்.

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, "எளிய பின்னணியில் இருந்து வந்து, தனது கடும் உழைப்பாலும், மேன்மையான பண்புகளாலும், இந்தியத் திரையுலகின் அடையாளங்களில் ஒருவராக உயர்ந்திருக்கும், அன்புக்கும் மரியாதைக்கும் உரிய, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்துக்கு இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மூன்று தலைமுறைகளை, தனது வசீகரத்தால் கட்டிப் போட்டிருக்கும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், மேலும் பல்லாண்டுகள் நலமுடன் ஆரோக்கியத்துடன் வாழ, இறைவனை வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "மதிப்பிற்குரிய நடிகர் ரஜினிகாந்த்துக்கு பிறந்த நாள் வாழ்த்துகளை தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் நல்ல உடல் நலத்துடன் நீடுடி வாழ இறைவனை வேண்டுகிறன்" என குறிப்பிட்டுள்ளார்.

## வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா: தந்தை பெரியார் நினைவகத்தை திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, டிச.13

கேரளாவின் வைக்கத்தில் நடைபெற்ற "வைக்கம் போராட்டம் நூற்றாண்டு நிறைவு விழா"வில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை விவரம்: கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்திலுள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களிலும், கோவிலுக்கு எதிரே உள்ள தெருவிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஈழவர்கள், தீயர்கள், புலையர்கள் முதலான சமுதாயத்தினர் நடந்து செல்லவே கூடாது என்னும்கொடிய தடை இருந்தது. அந்தத் தடையை நீக்கக் கோரி 1924 ஆம் ஆண்டு வைக்கம் போராட்டம் நடைபெற்றது.

வைக்கம், கேரள மாநிலத்தின் அன்றைய திருவாங்கூர் சமஸ்தானத்தில் அடங்கியிருந்த நகரமாகும். அந்நகரிலுள்ள மகாதேவர் கோவிலைச் சுற்றி அரசு அலுவலகங்கள், நீதிமன்றம் எல்லாம் இருந்தன. ஈழவர் சமுதாயத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் மாதவன் என்பவர் தீண்டத்தகாதவர் என்பதால், அந்த நீதிமன்றத்திற்குள் செல்ல முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டது. இதனை எதிர்த்து வழக்கறிஞர் மாதவன், கேசவ மேனன், டி.கே.மாதவன், பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் முதலான பலர் போராடினார்கள்.

போராட்டம் நடத்திய அனைவரையும் திருவாங்கூர் சமஸ்தான போலீசார் கைது செய்தனர். அதனால், போராட்டம் நின்றுவிடும் சூழ்நிலை



உருவானது. அப்போது இறுதியாக கைதாகிச் சிறை சென்ற பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப், கேசவ மேனன் ஆகியோர் கையெழுத்திட்டு; அப்போது, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்களுக்குக் கடிதம் எழுதி, வைக்கம் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தி வெற்றி தேடித் தேர வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தனர். அந்தக் கடிதம் கிடைத்ததும், 13.04.1924 அன்று வைக்கம் நகருக்கு வந்த தந்தை பெரியார் அவர்களால் போராட்டம் தீவிரம் அடைந்தது.

தந்தை பெரியார் அனைத்து மக்களிடமும் வைக்கம் போராட்டம் குறித்து தமது சீர்திருத்த, சமூக நீதிக் கருத்துக்கள் மூலம் பிரச்சாரம் செய்ததால், போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் திரண்டதைக் கண்டு பொறுக்க முடியாத நிலையில், திருவாங்கூர் போலீஸார் தந்தை பெரியாரை கைது செய்து சிறையில் அடைத்தனர். முதல் முறை 1 மாதமும், இரண்டாவது முறை 4 மாதமும் கடுங்காவல் தண்டனை வழங்கி, தந்தை பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். வைக்கம் நகரைச் சுற்றியிருந்த கிராம மக்களும் திரண்டு தொடர்ந்து போராடியதால் திருவாங்கூர் சமஸ்தான அரசு பணிந்து, மகாதேவர் கோயில் தெருக்களில் ஈழவர் முதலான வகுப்பார் நடந்து செல்வதற்கு இருந்த தடையை நீக்கி, எல்லோரும் செல்லலாம் என்று ஆணைபிறப்பித்தது. வைக்கம் போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றதால் தந்தை பெரியார் "வைக்கம் வீரர்" எனப் போற்றப்பட்டார்.

வரலாற்று சிறப்புமிக்க இந்த வைக்கம் போராட்டம் நடைபெற்று நூறு ஆண்டுகள் ஆனதையொட்டி, "வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டினையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2023 ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் தொடங்கி ஓராண்டு காலம் பல் வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்" என்று தமிழக முதல்வர் சட்டமன்றப் பேரவையில் 30.03.2023 அன்று விதி 110 இன் கீழ் அறிவித்தார்.

அதன்படி, சென்னை, பெரியார் திடலில் 28.12.2023 அன்று நடைபெற்ற "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டு சிறப்பு விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 'தமிழரசு' அச்சகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட "வைக்கம் போராட்டம் (1924 2023) நூற்றாண்டு மலரினை" தமிழக முதல்வர் வெளியிட, கேரளா முதல்வர் பினராயி விஜயன் பெற்றுக்கொண்டார். இவ்விழாவில், "பெரியாரும் வைக்கம் போராட்டமும்" என்ற நூலை கேரளா மாநில முதல்வர் பினராயி விஜயன் வெளியிட்டார்.

வைக்கம் வீரர் தந்தை பெரியார் நினைவாக, அந்நகரில் தந்தை பெரியார் நினைவகமும், பெரியார் நூலகமும் தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டுள்ளது. தந்தை பெரியார், வைக்கம் போராட்டத்தில் பங்கேற்ற நூற்றாண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்காக வைக்கம் நகரில் உள்ள தந்தை பெரியார் நினைவகத்தையும், நூலகத்தையும் புதுப்பித்திட 8 கோடியே 14 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி முதல்வர் ஸ்டாலின் ஆணையிட்டார்.

அதன்படி, தமிழக அரசின் பொதுப்பணித் துறையால் புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை தமிழக முதல்வர் இன்றையதினம் திறந்து வைத்தார். இப்பெரியார் நினைவகத்தில் புகைப்படக் காட்சிகூடம், திறந்த வெளி அரங்கம், சிறுவர் பூங்கா ஆகியவையும், நூலகத்தில், 5000க்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கிலம் மற்றும் மலையாள மொழி புத்தகங்களும் இடம்பெற்றுள்ளன.

அதனைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டிற்கான வைக்கம் விருதினை கர்நாடக மாநிலம், மைசூரு மாவட்டத்தை சேர்ந்த எழுத்தாளரும், சமூக ஆர்வலருமான தேவநூர மஹா தேவாவுக்கு, விருதுடன் ஐந்து லட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கம் ஆகியவற்றை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நில ஆக்கிரமிப்பில் ஈடுபட்டவர்கள் சட்டரீதியாக உரிமை கோர முடியாது

### மேல்முறையீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, டிச.13

நில ஆக்கிரமிப்பில் ஈடுபட்டவர்கள் அந்த நிலத்துக்கு சட்டரீதியாக உரிமை கோர முடியாது என உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

பர்மாவில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பர்மா இந்தியர்கள் வீட்டு வசதி கட்டுமான கூட்டுறவு சங்கம் உருவாக்கப்பட்டு, பாலவாக்கம் திருவள்ளுவர் நகரில் 24 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது.

இந்நிலையில், இதில் 4.47 ஏக்கர் நிலத்தை 250 குடும்பத்தினர் ஆக்கிரமித்து வீடுகளைக் கட்டி நீண்டகாலமாக குடியிருந்து வருகின்றனர். இந்த ஆக்கிரமிப்பாளர்களை காலி செய்து நிலத்தை மீட்டு ஒப்படைக்கக்கோரி, பர்மா இந்தியர்கள் வீட்டு வசதி கட்டுமான கூட்டுறவு சங்கம் சார்பில்,



சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அங்கு வீடு கட்டி வசிக்கும் ஆக்கிரமிப்பாளர்களை காலி செய்யும்படி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியருக்கும், வட்டாட்சியருக்கும் உத்தரவிட்டது. சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் தள்ளுபடி செய்தது.

இந்நிலையில் அந்த இடத்தை காலி செய்துவிட்டு, கண்ணகி நகரில் உள்ள குடிசைமாற்று வாரிய வீடுகளுக்கு இடம் பெயரும்படி வட்டாட்சியர் பிறப்பித்த நோட்டீஸை எதிர்த்து முனியப்பன், பெருமாள், கன்னியப்பன் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதையடுத்து இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜெ.பி.பர்திவாலா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, "நில ஆக்கிரமிப்பில் ஈடுபட்டவர்கள் அந்த நிலத்துக்கு சட்டரீதியாக உரிமை கோர முடியாது. ஆக்கிரமிப்பு செய்துவிட்டு அதற்கு நீதிமன்றம் மூலம் உரிமையியல் வழக்கில் தீர்வு காணலாம் எனக் கூறுவதை ஒருபோதும் ஏற்க முடியாது. மாற்று இடம் வழங்குவது தொடர்பாக மனுதாரர்கள் மீண்டும் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகலாம்" எனக் கூறி வழக்கை முடித்து வைத்துள்ளனர்.

## உயர்கல்வித்துறை கலந்தாய்வு கூட்டம்: அமைச்சர் கோவி.செழியன் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள்

சென்னை, டிச.13

மாணவர்களுக்குத் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கும் முறைகள் பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் கோவி.செழியன் கூறியுள்ளார்.

உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தலைமையில் உயர்கல்வித்துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டம் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், "தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறையின் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்பட்டு மாணவர்களின் கல்வித் திறனை மேலும் மேன்மை அடையச் செய்திடும் வழியில் உயர்கல்வித்துறை பங்களிப்பாளர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் கருத்தினைப் பெற்றுச் செயல்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, உயர்கல்வித் துறை பங்களிப்போர் கூட்டம் திருச்சிராப்பள்ளி, கோயம்



புத்தூர் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் மண்டலங்கள் வாரியாக நடத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக சென்னை மண்டலத்திற்குட்பட்ட உயர்கல்வித் துறை பங்களிப்போர் கலந்தாய்வின் நான்காவது கூட்டம் இன்றைய தினம் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில் நடைபெறுகின்றது.

உயர்கல்வித்துறையினை மேலும் மேம்படுத்திட உயர் கல்வித் துறை அரசு அலுவலர்களுடன் உயர்கல்வித்துறையின் பங்களிப்போர் அனைவரையும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடி கருத்துகளைப் பெற இங்கு வந்துள்ளோம்.

இதன்மூலம் தாங்கள் வழங்கும் அரிய கருத்துகளைத் திரட்டித் தொகுத்து உயர் கல்வியின் தரத்தினை மேலும் மேம்படுத்திடக் கருதியுள்ளோம். 7.5 சதவீத இடஒதுக்கீடு என்பது நீட் தேர்வினால் நமது கிராமப்புற மாண வர்கள் தங்களது உயர் கல்வி யினைப் பெற இயலாத நிலை யைக் கருத்தில் கொண்டு முந்தையஅரசால் மருத்துவ மாணவர்களுக்கு மட்டும் அறிவிக்கப்பட்டது.

இதனால் இட ஒதுக்கீடு பெற்ற ஒரு மாணவி இந்த இட ஒதுக்கீட்டினால் படிக்க இடம் கிடைத்தும் போதிய வசதி இல்லாததால் மருத்துவப் படிப்பைத் தொடர இயலவில்லை எனத் தெரிவித்த போது அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் தற்போதைய முதல மைச்சருமான நமது முதலமைச்சர், இதனைக் கனிவுடன் கேட்டு, அப்போதே அந்த மாணவியின் முழுக் கல்விச் செலவையும் தானே ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார்.

இந்நிகழ்ச்சியின்போது, உயர்கல்வித்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் கே. கோபால், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் ஆப்ரகாம், தமிழ்நாடு உயர்கல்வி மன்றத் துணைத் தலைவர் எம்.பி. விஜயகுமார், பேராசிரியர் பெருமக்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னையில் விட்டு விட்டு வெளுத்து வாங்கும் கனமழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

சென்னை, டிச.13

சென்னையில் புதன்கிழமை இரவு முதல் வியாழக்கிழமை காலை வரை விட்டு விட்டு வெளுத்து வாங்கும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. சராசரியாக 53 மி.மீட்டர் மழை பதிவாகியிருப்பதாக கூறப்படுகிறது.

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டிய கிழக்கு இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி புதன்கிழமை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று, தென்மேற்கு மற்றும் அதையொட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவுகிறது.

இது மேற்கு வடமேற்கு திசையில், தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில், இலங்கை தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும். இதன் காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி, மின்னலுடன் கூடிய, லேசானது



முதல் மிதமான மழை பெய்யலாம்.

கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மாவட் டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதியிலும் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும். சிவகங்கை, ராமநாதபுரம், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் சென்னையில் புதன்கிழமை இரவு முதலே தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. வியாழக்கிழமை அதிகாலை 4 மணியிலிருந்து கனமழை விட்டு விட்டு பெய்து வருவதால், பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கனமழை காரணமாக, காலையில் பணிகளுக்குச் செல்வோர், வாகன ஓட்டிகள், கடுமையாக பாதிக்கப்பட்டனர். மழைநீர் பல இடங்களில் தேங்கியுள்ளதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. வானில் கரு மேகங்கள் சூழ்ந்திருப்பதால், சாலைகளில் செல்லும் வாகனங்கள், முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டப்படி சென்றன.

சென்னையில், கிண்டி, கோயம்பேடு, மதுரவாயல், வடபழனி, தி.நகர், சைதாப்பேட்டை, அடையாறு, எழும்பூர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், நெற்குன்றம், வானகரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதேபோல், ஆவடி, அம்பத்தூர் உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும் இன்று காலை முதல் விடாது மழை பெய்து வருகிறது.

சென்னையில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக முக்கிய சாலைகள், குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியிருக்கும் தண்ணீரை அகற்றும் பணிகளில் மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். சென்னையில், சராசரியாக 53 மி.மீ மழை பதிவாகியிருப்பதாக மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக சென்னை விமான நிலையத்தில் இருந்து, துபாய், இலங்கை, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் 15 விமானங்களின் புறப்பாடு தாமதமாகின.

## மானாமதுரை நகர்க்கழக திமுக சார்பில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

மானாமதுரை, டிச.13

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர்க்கழக திமுக சார்பில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது...

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர் திமுக சார்பில் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 1வது வார்டு உடைகுளம் அருகில் உள்ள வைரமணி வளாகத்தில் நகர செயலாளர் பொன்னுச்சாமி முன்னிலையில் அவைத்தலைவர் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் நகராட்சி



துணை சேர்மன் பாலசுந்தரம், திமுக நகர பொருளாளர் மயில்வாகனன், இலக்கிய அணி மோகனசுந்தரம், மகளிரணி கவுன்சிலர் சண்முகப்ரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அப்போது பேசிய நகர செயலாளர் பொன்னுசாமி வரு கின்ற சட்டமன்ற தேர்தலில் கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மீண்டும் கழக ஆட்சி அமைத்திட பாடுபடுவோம் எனவும் மீண்டும் கழக ஆட்சி தான் அமைந்திடும் எனவும் பெருமிதம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நகர இளைஞரணி, மாணவரணி திமுக நிர்வாகிகள் மற்றும் ஐடி விங் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 196வது வட்ட திமுக சார்பில் உதயநிதியின் உதய நாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கல்



சோழிங்கநல்லூர் டிச13

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 196 வது வட்டம், கண்ணகி நகர், கார்ப்பரேஷன் ஆபீஸ் எதிரில் சென்னை 97, தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுபிரமணியன் ஆணைக்கிணங்க , நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு உதயநிதியின் உதய நாள் விழாவில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டம் மாலை 6 மணிக்கு கண்ணகி நகரில் , 196 வது வட்டக் கழகச் செயலாளர் டி. சீனிவாசன் (எ) சீனு தலைமையில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் முன்னிலையில் மகளிர் அனைவருக்கும் பக்கெட் பரிசு பொருட்களை வழங்கி சிறப்பாக நடைபெற்றது. விழாவில் தலைமை பொதுக்குழு உறுப்பினர்,முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் எம். கே .ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் அ.அரிகிருஷ்ணன், 196வது வட்டக் கழக செயலாளர் பி. என். ஜோதி, அருள், தீனதயாளன், இளங்கோவன், மூர்த்தி, முருகன் சரண்யா, ஏழுமலை, அரவிந்த், பாஸ்கர், துரை, குமார், டில்லி பாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இ. அ. மா. து. அமைப்பாளர் கா.வி. தியாகராஜன், தொ. த. தொ.அ.ஒருங்கிணைப்பாளர் கி. ஸ்டாலின் மொழி, தலைமை செயற்குழு உறுப்பினர், பாலவாக்கம் க.சோமு,195 வது வட்டக் கழகச் செயலாளர், மாமன்ற உறுப்பினர், நகர அமைப்பு நிலைக்குழு உறுப்பினருமான க.ஏகாம்பரம், வட்டக் கழக செயலாளர்கள் எ . கே. ஆனந்த், தேவகுமார், நன்றி உரையாக ஸ்ரீமூர்த்தி, முருகன் உள்ளிட்ட196வது வட்ட தி. மு.க.சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி சென்னை தெற்கு மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# தேசிய விருதினை பெற்ற பம்மல் அன்னை தெரசா மாற்றுத்திறனாளி நலவாரிய இயக்குனர்



செங்கல்பட்டு டிச12

செங்கல்பட்டு மாவட்டம் புதுடில்லியில் மத்திய அரசு சார்பாக குடியரசு தலைவரின் திருகரங்களால் தலைசிறந்த மாற்றுத் திறனாளிக்கான தேசிய விருதை தமிழகத்தை சார்ந்த பம்மல் அன்னை தெரசா மாற்றுத்திறனாளி வெல்பர் டிரஸ்ட் இயக்குனர் கவிதா அவர்களுக்கு வழங்கப் பட்டது. பல்லாவரம் அடுத்த பம்மல் அன்னை தெரசா மாற்றுத் திறனாளி வெல்பர் டிரஸ்ட் அதன் இயக்குனர் கவிதா அவர்கள் சுமார் 5 ஆண்டு மேலாக சமூகப் பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றனர். சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டத்தில் உள்ள பகுதிகளில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு கொடுக்கப்படும் சலுகைகளை பெற்று தந்து தங்களுடைய சேவைகளை புரிந்து வருகின்றனர்.

இவர்களுடைய சேவையை பாராட்டி மத்திய அரசு குடியரசு தலைவர் அவர்களின் திருகரங்களால் தலை சிறந்த மாற்று திறனாளிக்கான தேசிய விருதினை பம்மல் அன்னை தெரசா மாற்றுத் திறனாளி வெல்பேர் டிரஸ்ட் இயக்குனர் கவிதா அவர்களுக்கு வழங்கப்பட்டது. புது டெல்லியில் இருந்து சென்னையை திரும்பிய கவிதா அவர்களுக்கு மாற்றுத் திறனாளிகள். மற்றும் சமூக ஆர்வலர்கள் அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் மலர்களை தூவி சால்வை மற்றும் .மாலைகள் அணிவித்து கௌரவப்படுத்தினர் இவர்களுடன் . வித்தியாசாகர், அருணகிரி,கோவிந்தராஜன், பம்மல் பாலு,கவிஞர் செல்வ ராஜ்.ஆவடி லதா. ரங்கன் சரசு மண்டபம். குமரன். பம்மல் கலா. தேவி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை சின்னசொக்கிகுளம் பகுதியில் டி.என்.சி சிட்ஸ் ஃபண்ட் புதிய கிளை திறப்பு



மதுரை: டிச 13

சென்னையை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் 60 ஆண்டுகள் பழமை கொண்ட டிஎன்சி சிட்ஸ் ஃபண்ட் புதிய கிளை மதுரை சின்னசொக்கிகுளம் பகுதியில் திறப்பு விழா நடைபெற்றது. நிறுவனத்தின் புதிய கிளையை டிஎன்சி குழுமத்தின் தலைவர் இளங்கோவன் குத்து விளக்கேற்றி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் டிஎன்சி நிறுவனத்தின் இயக்குனர்கள் மீனா இளங்கோவன், பிரேம் இளங்கோவன், ஸ்நேகா பிரவீன், செயல் தலைவர்கள் பிரதாப்ராஜ் வர்மா, பிரதீப், உமா ரவி, சேலம் மண்டல மேலாளர் யுவனேஸ்வரி, மக்கள் தொடர்பு அலுவலர் அருண்குமார், திட்ட மேலாளர் நெல்செண்ட், சேலம் கிளை மேலாளர் வடி வேல், மண்டல தலைவர் செந்தில் குமார், மதுரையின் முக்கிய பிரமுகர்கள், நிறுவனத்தின் ஊழியர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்தக் கிளை தமிழகத்தின் 46வது கிளை என்பதும், மதுரையின் முதல் கிளை என்பதும் குறிப்பிடத்தக்கது.



தூத்துக்குடி பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சென்னை செல்வதற்காக தூத்துக்குடி விமான நிலையத்திற்கு வருகைதந்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை நேற்று மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், புத்தகம் கொடுத்து வரவேற்றார்.

# கன்னியாகுமரி அதங்கோட்டில் புலவர் அதங்கோட்டாசான் உருவ சிலைக்கு சார் ஆட்சியர் மாலை அணிவித்து மரியாதை





கன்னியாகுமரி டிச13

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், மெதுகும்மல் ஊராட்சிக்குட்பட்ட அதங்கோட்டில் அமைந்துள்ள தமிழ்பெரும்புலவர் அதங்கோட்டாசான் திருவுருவ சிலைக்கு பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா மாலை அணிவித்து, மலர்தூவி, மரியாதை செலுத்தினார்.

அதங்கோட்டாசான் என்றழைக்கப்பட்ட தமிழ் பெரும் புலவர் அவர்கள் கி.மு7ஆம் நூற்றாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு திசையில், வள்ளுவன்கோடு என அழைக்கப்பட்டு, மருவி தற்போது, விளவங்கோடு என்றழைக்கப்படும் பகுதிக்குட்பட்ட குளப்புறம் கிராமத்திற்கு அருகில், தற்போதைய முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், மெதுகும்மல் ஊராட்சிக்குட்பட்ட அதங்கோடு எனும் கிராமத்தில் பிறந்து, வாழ்ந்து, நமது மண்ணில் தமிழ் வளர்க்க அரும் பணியாற்றியவர். அப்போதைய பாண்டிய மன்னர்கள் அரசவையில் பாண்டிய மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்த கபாடபுரத்தில் உள்ள தமிழ் சங்கத்தில் இணைந்து தமிழ் பணி ஆற்றினார்கள். குறிப்பாக, தமிழ் இலக்கியங்களில் ஒன்றான தொல்காப்பியத்தை வளர்த்து, அன்றைய அரசவையில் தமிழ் கவிஞராகவும் விளங்கியவர் தமிழ் பெரும்புலவர் அதங்கோட்டாசான் ஆவார்கள். மேலும், அகத்திய முனிவரின் முக்கியமான 12சீடர்களில் தலைசிறந்த ஒருவராகவும் திகழ்ந்தார்.

மேலும், இவர் பிறந்த ஊரான அதங்கோட்டில் தமிழ் பெரும்புலவர் அதங்கோட்டாசான் அவர்களை நினைவுகூறும் வகையில் வருடந்தோறும், டிசம்பர் 12ம் தேதி தமிழக அரசின் சார்பில், அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், நேற்று அதங்கோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண் ஜெகத் பிரைட், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ராஜேஸ்வரி, புதுக்கடை பேரூராட்சி தலைவர் மோகன்ராஜ், அதங்கோட்டாசான் வாரிசு புலவர் கோவிந்தநாதன், மெதுகும்மல் ஊராட்சி மன்ற தலைவர் சசிகுமார், கிள்ளியூர் துணை வட்டாட்சியர் முருகன், வருவாய் அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, மாவட்ட ஆட்சியர் காணொளி காட்சி மூலம் ஆய்வு மேற்கொண்டார்



திண்டுக்கல் டிச13

திண்டுக்கல் மாவட்டத்தில் கனமழை முதல் மிக கன மழை பெய்வதற்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதையடுத்து, மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் மொ.நா. பூங்கொடி, அனைத்துத்துறை அலுவலர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

திண்டுக்கல் மாவட்டத்தில் 12.12.2024 மற்றும் 13.12.2024 ஆகிய தேதிகளில் கனமழை முதல் மிக கன மழை பெய்வதற்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. அதையடுத்து, மழை வெள்ள பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அனைத்துறை அலுவலர்களும் தாழ்வான பகுதிகள், நீர்நிலைகள், கால்வாய்கள், ஓடை மற்றும் மழைநீர் தேங்குவதற்கு வாய்ப்புள்ள பகுதிகள் என கண்டறியப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் கள ஆய்வு செய்து அடைப்புகள்,ஆக்கிரப்புகள் ஏதேனும் இருப்பின் அவற்றை போர்க்கால அடிப்படையில் சரி செய்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வெண்டும். மேலும் கன மழையை எதிர்கொள்ள அனைத்து அலுவலர்களும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்.

பொதுமக்கள் 12.12.2024 மற்றும் 13.12.2024ஆம் தேதிகளில் தக்க முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்களின் வசதிக்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ள அலுவலகம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் விபரம் வருமாறு:

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - 04511077, 0451 2460321, 2460322, 2460323, 2460324, திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் அலுவலகம் - 0451 2471305, திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் அலுவலகம் 0451 2471304, நத்தம் வட்டாட்சியர் அலுவலகம் - 04544 244452, நிலக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் -04543 233631, ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் 0451 2556212, பழனி வட்டாட்சியர் அலுவலகம் - 04545 242266, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகம் - 04553 241100, வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலகம் - 04551 260224, குஜிலியம்பாறை வட்டாட்சியர் அலுவலகம் - 04551 290040, கொடைக்கானல் வட்டாட்சியர் அலுவலகம் - 04542 240243, பழனி சார் ஆட்சியர் அலுவலகம் - 04545 242250, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் 0451 2432615, கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் 04542 240296 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

பொதுமக்கள் மழை தொடர்பான தகவல்கள், புகார்கள் மற்றும் சேதங்கள் ஏதேனும் இருப்பின் அதன் விபரங்களை கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம், என மாவட்ட ஆட்சியர் மொ. நா.பூங்கொடி, தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மு. கோட்டைக்குமார் உட்பட துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வண்டலூர் கிரசண்ட் பல்கலைகழகத்தில் பசுமை ஆற்றல் குறித்த சர்வதேச சிறப்பு கருத்தரங்கு




வண்டலூர் டிச.13

வண்டலூர் கிரசண்ட் பல்கலைகழகத்தில் பசுமை ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான ஸ்மார்ட் மெட்டீரியல்ஸ் சர்வதேச சிறப்பு கருத்தரங்கு நடைப்பெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் உள்ள பி.எஸ்.ஏ கிரசண்ட் பல்கலைகழகம் சார்பில் இயற்பியல் மற்றும் வேதியியல் அறிவியல் துறை சார்பில் பசுமை ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான ஸ்மார்ட் மெட்டீரியல்ஸ்'' 2 நாள் சர்வதேச மாநாடு பல்கலை கழக வளாகத்தில் நடைப் பெற்றது.

முதல்நாள் மாநாடு தொடக்க நிகழ்ச்சிக்கு பல்கலைகழக துணை வேந்தர் டாக்டர் டி. முருகேசன் தலைமை தாங்கினார். பல்கலைகழக பதிவாளர் ராஜா உசேன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக அண்ணா பல்கலைக்கழகத்தின் புகழ் பெற்ற பேராசிரியரும், தொழில்நுட்ப அறிவியல் துறையின் முன்னாள் செயலருமான பத்ம பூஷன் மற்றும் பட்நாயக் விருது பெற்றவருமான டாக்டர் டி. ராமசாமி கலந்து கொண்டு சர்வதேச மாநாட்டினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:

சமூகத்திற்கு பாதிப்பு இல்லாத வகையில் கார்பன் டை ஆக்சைட்டின் அளவை குறைப்பது குறித்து மற்றும் பொருதாளரம் உயர்வதற்கான கண்டு பிடிப்பிகளில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணி யாற்ற வேண்டும் என கேட்டு கொண்டார்.

அதனை தொடர்ந்து பல விரிவுரையாளர்கள் இயற்பியல் மற்றும் வேதியியல் அறிவியல் துறை சார்பில் பசுமை ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் குறித்து மாணவர்களுக்கு பல கருத்துரைகளை எடுத்துரைத்தனர். இந்த நிகழ்ச்சியை இயற்பியல் மற்றும் வேதியியல் மையத்தின் டீன் டாக்டர் ஐ. ராஜாமுகம்மது, இயற்பியல் துறை தலைவர் டாக்டர் ஜி.வி.விஜயராகவன், வேதியல் துறை தலைவர் டாக்டர் ந. ஹாஜராபிவி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் பேராசியர் எம்.முகம்மது ஷேக் சிராஜூதீன், பேராசியர் எம். ஆஷா ஜோன்சி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பல்வேறு பல்கலைகழகம் மற்றும் கல்லூரிகளை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# ஜெயமங்கலம் அருகே டாடா காஃபி நிறுவன பணியாளர்களுக்கு சட்டம் பற்றிய விழிப்புணர்வு

பெரியகுளம் டிச 13






தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே ஜெயமங்கலத்தில் உள்ள டாடா காஃபி தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு தேசிய மகளிர் ஆணையம், தேனி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் பெரியகுளம் வட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு சார்பில் சட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. வழக்கறிஞர்கள் டிம்பிள் சிவப்பிரியா, விமலா மற்றும் சமூக நலன் துறை வழக்கு பணியாளர் பௌசியா பேகம் ஆகியோர் கலந்து கொண்டு பணியாளர்களுக்கு மனித உரிமை மீறல், பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம், பணி புரியும் இடங்களில் பாலியல் தொடர்பான எதிர் கொள்ளுதல், போக்சோ விழிப்பு ணர்வு, குழந்தை திருமணம், காவல் நிலையத்தில் புகார் கொடுப்பது மற்றும் வழக்கு தொடர்பான தகவல், பெண்களுக்கான சொத்துரிமை பற்றிய தகவல், பெண் குழந்தைகள் பாதுகாப்பு உள்ளிட்ட சட்டம் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களை பற்றி பேசினர். இந்நிகழ்வில் டாடா காஃபி நிறுவன மனித வள அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் பெரியகுளம் வட்ட சட்ட பணி ஆணைக் குழு தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட பணியாளர்களுக்கு சட்டம் பற்றிய துண்டு பிரசுரங்கள், கையேடுகள் மற்றும் எழுதுகோல்கள் தேனி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழு சார்பில் வழங்கினர்.




கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் கசூரா கார்டனில் தொழிலதிபர் முரளி உடையாரின் அதிநவீன திறந்தவெளி விளையாட்டு அரங்கம் திறப்பு விழாவிற்க்கு நகர மன்ற தலைவர் முருகன் மற்றும் நகர மன்ற கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ன் கீழ் 24,117 தொழில் முனைவோர்- பயனாளிகளுக்கு ரூ.39.93 கோடி மதிப்பிலான உதவிகள்

மதுரை: டிச 13



மதுரை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் செயல்படுத் தப்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல் பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, இ.ஆ.ப., மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் திருமோகூர் ஊராட்சியில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுடன் கலந்துரையாடினார்.

குறிப்பாக, திருமோகூரில் உள்ள வளையாபதி திருமண மஹாலில், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் பயனடைந்து தொழில் முனைவோராக உயர்ந் துள்ள பல்வேறு மகளிர் குழுக்கள் மூலம் அவர்களின் உற்பத் திப் பொருட்கள் காட்சிப்படுத் தப்பட்ட அரங்குகள் அமைக்கப் பட்டிருந்தன. இவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் .சங்கீதா, இ.ஆ.ப., பார்வையிட்டார். அதன்பின்பு, திருமோகூரில் செயல்பட்டு வரும் செம்பருத்தி தையல் தொழில் குழு கூடத் திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டு மகளிருடன் கலந்துரையாடினார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, இ.ஆ.ப., தெரிவித்ததாவது:

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கியின் நிதி உதவி யுடன் தொடங்கப்பட்ட ஒரு தனித்துவம் வாய்ந்த திட்ட மாகும். இத்திட்டம் ஊரக பகுதிகளில் தொழில் மேம் பாடு, நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் சமுதயாத்தில் நிலையான வளர்ச்சி என்பதை நோக்கமாகக் கொண்ட தனித்துவமிக்க திட்ட மாகும். இத்திட்டம் துணை முதலமைச்சர் மேற்பார்வையில் செயல்பட கூடிய சிறப்பு திட்ட மாகும். இத்திட்டம் மதுரை மாவட்டத்தில் திருப்பரங்குன்றம், மதுரை கிழக்கு, மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி ஆகிய நான்கு வட்டங்களில் 137 ஊராட்சிகளில் செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் மூலம் சுய உதவி குழுபெண்கள் மற்றும் அவர் குடும்பத்தை சார்ந்து உறுப் பினர்கள். முதன்மை பயனாளி களாக பயன்பெற தகுதி உடைய வர்கள், பெண்கள், ஆதிதிரா விட பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டத்தின் வாயிலாக உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்குதல், தொழில் குழுக்களை உருவாக்குதல், உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குதல், தொழில் நிறுவ னங்களுக்கு இணை மானிய நிதி மற்றும் நுண் நிறுவன நிதி மூலம் நிதி உதவி வழங்குதல் மற்றும் சமுதாய பண்ணை பள்ளி மற்றும் சமுதாய திறன் பள்ளி மூலம் திறன் பயிற் சிகள் வழங்கப்பட்டு வருகிறது. தொழில் குழுக்கள் என்பது ஒரே வகையான தொழில் ஈடுபட் டுள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 42 தொழில் குழுக்கள் அமைக் கப்பட்டு அவர்களது தொழில் மேம்பாட்டு பணிகளை மேற் கொள்வதற்காக இதுவரை ரூ.31,50,000/ நிதி வழங்கப் பட்டு தொழில் உதவி வழங்கப் பட்டுள்ளது. உற்பத்தி குழுக்கள் என்பது உற்பத்தியாளர் குழுக்கள் என்பது உற்பத்தி யாளர்கள் குழுவாக ஒன்றி ணைந்து உற்பத்தித் திறனை அதிகரித்தல், உபரி விளைப் பொருட்களை ஒன்று திரட்டு தல், இதர கூட்டு நடவடிக்கை களுக்காக ஒன்றிணைந்து உற்பத்தியாளர்களின் வரு மானம்மற்றும் இலாபத்தை அதிகரித்தல் ஆகும். புதிதாகத் தொடங்கப்பட்ட உற்பத்திக் குழுக்களுக்கு தொடக்க நிதி மானியமாக தலா ரூ.75,000/ வீதம் 108 குழுக்களுக்கு மொத்த தொகை ரூ.81 இலட்சம் தொடக்க நிதி மானியமாக வழங் கப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர் நிறுவனம் விவசாய உற்பத்தியாளர் குழுக்களில் இருந்து ஆர்வ முடைய மகளிர் உற்பத்தி யாளர்களை தேர்ந்தெடுத்து அவர்களே முன்னின்று நடத் தும் வகையில் மேலூர் வட்டா ரத்தினை தலைமை இடமாகக் கொண்டு மதுரை பலப்பயிர் உற்பத்தியாளர் நிறுவனம் புதிதாக தொடங்கப்பட்டு தலா ரூ.30 இலட்சம் நிதி உத விகள் மூலம் தொழில்கள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பின் மகளிர் உற்பத்தியாளர் குழு உறுப்பி னர்கள் மற்றும் அவர்களது விளைப்பொருட்களை ஒருங்கி ணைத்தல், மதிப்ப கூட்டுதல், மாட்டு தீவனம் உற்பத்தி, சந்தைப்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களுக்கு சேவை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோவிட்19 நிதி பெருந்தொற்று காலத்தில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் (கூஷிறிஸிசி) மூலமாக ஒவ்வொரு ஊராட் சிக்கு தலா ரூ1,25,000/ மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF) மூலமாகவும் தலா ரூ.4,00,000/ மற்றும் புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய திறன் பெற்ற இளைஞர்களுக்கு (SYMR) தனிநபர் தொழில் கடனாக தலா ரூ.1,00,000/ நிதியும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 3,331 பயனாளிகளுக்கு ரூ.9.06 கோடி மதிப்பிலான தொகை மகளிர் கூட்டமைப்பின் வயிலாக தொழில் கடனாக வழங்கப் பட்டுள்ளது. NEFF- Nano Enterprise Financing Fund (NEFF)– PLF என்ற வங்கி கணக் கிற்கு கோவிட் 19 100 சதவீதம் கடன் திருப்பம் செய்த ஊராட் சிகளில் உள்ள தொழில்முனை வோர்களுக்கு பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு மூலம் மீண்டும் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதில் இதுவரை 113 பஞ்சாயத்துகளில் 900 நபர்களுக்கு ரூ.4.58 கோடி மதிப் பிலான கடன் உதவி வழங்கப் பட்டுள்ளது. இணை மானிய நிதி ஊரகப்பகுதிகளில் உருவாக்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில்களுக்கு தேவையான நிதயினை இணை மானிய நிதி திட்டத்தின் (Matching Grand Program) மூலமும், பிற நிதி நிறுவனங்களின் நிதி சேவை மூலமும் பெற்றுத் தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் திட்ட செயல் பாட்டின் மூலம் மதுரை மாவட்டத்தில் 340 நபர்களுக்கு (குறிப்பாக பெண் தொழில் முனைவோர்கள் மொத்தம் 233 பெண்களுக்கு) தொழிலை மேம்படுத்துதல் மற்றும் புதிதாக தொழில் அமைப்பதற்காக 30 சதவீதம் மானியத் தொகை யாக ரூ.3.68 கோடி மனியத்துடன் ரூ.11.14 கோடி மதிப்பிலான கடன் உதவிகள் வழங்கி தொழில் வாய்ப்புகள் உருவாக் கப்பட்டுள்ளன. சமுதாய பண்ணை பள்ளி இதுவரை 171 சமுதாய பண்ணை பள்ளி களுக்கு ரூ.13.61 கோடி மதிப் பிலான உதவிகள் வழங்கி விவசாய உற்பத்தியினை பெருக்கி தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. சமுதாய திறன் பள்ளி இதுவரை 81 சமுதாய திறன் பள்ளிகளுக்கு ரூ.64.36 இலட்சம் நிதி உத விகள் மூலம் சுயதொழில் மற்றும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. மதி சிறகுகள் தொழில் மையம் மதுரை மாவட்டத்தில் மகளிர் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தும் விதமாக தொழில் திட்டம் தயாரித்தல், ஆலோசனை வழங்குதல், உரிமம் பெற்று தருதல், சந்தை இணைப்பு தொடர்பான தகவல்கள் தெரிவித்தல், தொழில் வளர்ச்சிக்காகவும், பல்வேறு வசதிகளுக்காகவும் மற்றும் பிற துறைகள் மூலம் நிதி இணைப்பு பெற்றுத் தருதல் போன்ற செயல்பாடுகளுடன் வணிகதிட்டம் தயாரித்தல், Cibil Score சரிபார்த்தல், MSME, FSSAI சான்றிதழ், நிகிழி சிணீகூஷீ பதிவு செய்தல் பிற துறை நிறுவனங்களுடன் வங்கி கடன் இணைப்பு, சந்தை குறித்த தகவல்கள், சந்தைப்படுத்துதல் சேவைகள் வழங்குதல் மற்றும் E-SEVAI மூலம் சேவைகளை மதி சிறகுகள் தொழில் மையம் என்ற பெயரில் பூமாலை வணிக வளாகத்தில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. நான்கு ஒன்றியங்களில் 137 ஊராட்சிகளில் இதுவரை 24,117 தொழில் முனைவோர்கள் மற்றும் பயனாளிகளுக்கு ரூ.39.93 கோடி மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதுபோன்று வாழ்ந்து காட்டுவோம் திட்டம் பல தொழில்முனைவோர்களை உருவாக்கி மக்களின் பொரு ளாதார நிலையினை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, இ.ஆ.ப., தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, உதவி ஆட்சியர் (பயிற்சி) வைஷ்ணவி பால், இ,ஆ,ப., , வாழ்ந்துகாட்டு வோம் திட்டம் (மாவட்ட திட்ட அலுவலர்) சுந்தர பாண்டியன் , வேளாண் வணிக துணை இயக்குநர் மேரி , திருமோகூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.பி.ஆர். அண்ணாமலை உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவர் தலைமையில் கலந்தாய்வு கூட்டங்கள்

தென்காசி டிச.13





தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் குமரி தலைமையில்; தென்காசி மாவட்டத்திலுள்ள ஊராட்சி மற்றும் நகராட்சி பெண் வார்டு உறுப்பினர்கள், திருநங்கைகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் தனித்தனியாக கலந்தாய்வு கூட்டங்கள் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் குமரி தலைமையில்; மாவட்ட சமூகநல அலுவலர் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை) செல்வி.மதிவதனா முன்னிலையில் தென்காசி மாவட்டத்திலுள்ள ஊராட்சி மற்றும் நகராட்சி பெண் வார்டு உறுப்பினர்கள், திருநங் கைகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்களிடம் தனித்தனியாக கலந்தாய்வு கூட்டங்கள் நடை பெற்றது. இக்கூட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைக்கள் பாதுகாப்பு, சட்டங்கள், இலவச உதவி எண்கள், பணி புரியும் இடங்களில் பெண் களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் தடுப்பு, உள்ளக புகார் குழு அமைப்பது பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் முயற்சி யில் பாலியல் வன்கொடு மைக்கெதிரான புகார்களுக்கு அச்சம் தவிர் எனும் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை யும் மற்றும் அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் குமரி எடுத்துரைத்தார்கள்.

மேலும,; சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ்செயல்படும் சகி ஒருங் கிணைந்த சேவை மையத்திற்கு சென்னு செய்து அதன் செயல் பாடுகளை ஆய்வு மேற்கொண் டார். சிவசைலம் ஊராட்சியில் அமைந்துள்ள அவ்வை ஆசிர மத்திற்க்கு சென்று ஆய்வு மேற் கொண்டார்.

# கல்லூரணி, திப்பணம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு தென்காசி ஆட்சியர் தலைமையில் மனுநீதிநாள் முகாம்





தென்காசி டிச13

தென்காசி மாவட்டம், கல் லூரணி, திப்பணம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு திப்பணம்பட்டி மலையப்பபுரம் அருஞ்சுனை கலையரங்கத்தில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் தலைமையில் மனுநீதிநாள் முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் மாவட்ட ஆட்சியர் ஏ,கே.கமல் கிஷோர் தெரிவித்தாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களுக்கும் தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்களும் சென்றடைந்து பயனடைய வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் மனுநீதி நாள் முகாம் நடைபெற்று வருகிறது. இம் முகாமில் அரசுத்துறை அலு வலர்கள் அனைவரும் தங்கள் துறை சார்ந்த திட்டங்களை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் எடுத்துரைத்தார்கள். தமிழ்நாடு அரசு அறிமுகப் படுத்தியுள்ள அனைத்து திட்டங் களையும் பொதுமக்கள் கேட்ட றிந்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், தெரிவித்தார்.

இம்முகாமில் வருவாய்த் துறையின் மூலம் 08 பயனா ளிகளுக்கு ரூ.5,23,190/ மதிப்பி லான நத்தம் வரன்முறை பட்டா விற்கான ஆணையினையும், 06 பயனாளிகளுக்கு இணைய வழி பட்டாக்களையும், 01 பயனாளிக்கு தரிசு நிலத்திற் கான சான்றினையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு இயற்கை மரணத்திற்கான உதவித் தொகையினையும் (ணிசிஷி மூலம் ரூ.20,000/ வரவு வைத்தல்), 08 பயனாளிகளுக்கு உழவர் அட்டைகளையும், வேளாண்மைத்துறை மூலம் 01 பயனாளிக்கு மாநில வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 10 கிலோஜிங்க் சர்பேட் விநி யோகத்தில் ரூ.440/ மானியமும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு 2 கிலோ உளுந்து நுண்ணூட்ட உரம் விநியோகத்தில் தலா ரூ.118/ மானியமும், 01 பயனா ளிக்கு மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாற்றுப்பயிர் திட்டம் உளுந்து விதை 8 கிலோ, சூடோமோனாஸ் 1 கிலோ ரைசோபியம் 0.5 மற்றும் பாஸ்போக்ட்ரியா 0.5 இல் ரூ.1200/ மானியமும் தோட்டக் கலைத்துறை மூலம் 1 பயனா ளிக்கு வெண்டை விதைக ளையும், 1 பயனாளிக்கு மிளகாய் விதைகளையும் என மொத்தம் 30 பயனாளிகளுக்கு 5.45 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஏ,கே.கமல் கிஷோர் வழங் கினார்.

மனுநீதி நாள் முகாமில், தோட்டக்கலை துறை, வேளாண்மை துறை, சமூக நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் பல்வேறு துறைகளின் மூலம் அரசு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கண் காட்சியினையும் மாவட்ட ஆட்சியர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பார்வையிட் டார்கள். இந்நிகழ்ச்சியில். தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, மாவட்ட ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் திரு. சாக்ரடீஸ், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் திருமதி. காவேரி சீனித்துரை மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விடாத மழையிலும் தொடரும் மனிதாபிமானம்...

மானாமதுரை டிச13



சிவகங்கை மாவட்டம் கொட்டும் மழையில் பூ விற்கும் பெண்ணுக்கு மனமிரங்கிய அரசு பேருந்து டிரைவர் நேற்று நள்ளிரவு 1 மணி முதல் இளையான்குடி பகுதி யில் தொடர்ந்து மழை கொட்டி யது. அதனால் அன்றாட பணிக ளில் தொய்வு ஏற்பட்டது.

மழையோடு மழையாக நேற்று காலை தேவகோட்டையிருந்து சூராணம், சாலைக்கிராமம் வழியாக பரமக்குடிக்கு செல்வ தற்கு அரசு பஸ் சுமார் 8.45 மணிக்கு இளையான்குடி புது பஸ் ஸ்டாண்டிற்கு வந்தது. விடாது பெய்த மழையில் டிரைவர் பாண்டி மற்றும் கண்டக்டர் இறங்கி டைம் கீப்பர் நோட்டில் கையெழுத்திட்டனர்.

அப்போது மானாமதுரையில் இருந்து வந்த பஸ்சில் பரமக்குடி சந்தைக்கு பூ விற்பனை செய்வதற்காக பூ மூட்டைகளை கொட்டும் மழையில் நனைந்த படி பெண் ஒருவர் இறக்கி வைத்தார். மீண்டும் பரமக் குடி செல்லும் பஸ்சில் ஏற்று வதற்காக மழையில் நனைந்த படி தனி ஒருவராக தூக்கி வந்தார்.

இதை கவனித்த டிரைவர் பாண்டி தான் ஓட்டி வந்த பஸ்சை பூ மூட்டைகள் இருக்கும் இடத்திற்கே கொண்டு சென்று பூ மூட்டைகளை ஏற்ற டிரைவர் பாண்டி உதவி செய்தார். மழையில் நனைந்த பெண்ணுக்கு மனமிரங்கி உதவி செய்த டிரைவர் பாண்டியை பயணிகள் மனமார பாராட்டினர்.

# இராமநாதபுரம் மாவட்டத்தில் டிச.18 முதல் ஒரு வாரகாலம் ஆட்சி மொழிச்சட்டவாரம் நிகழ்ச்சி! ஆட்சியர் தகவல்

இராமநாதபுரம், டிச.13

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆட்சி மொழிச்சட்டவாரம் டிச.18.12.2024 முதல் 27.12.2024 வரை ஒரு வாரகாலம் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.



அரசு அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள், கடைகள், உணவகங்கள் ஆகியவற்றில் ஆட்சி மொழிச்சட்ட வாரத்தினை நினைவு கூறும் வகையில் ஒட்டுவில்லைகள் ஒட்டியும் துண்டறிக்கைகள் மற்றும் அனைத்து நிறுவனங்களிலும் தமிழில் பெயர்ப்பலகை அமைப்பது தொடர்பான அரசாணை வழங்கியும் கொண்டாடப்படும்.

இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள், பணியாளர்கள், தமிழறிஞர்கள், தமிழ் அமைப்புகள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவர்கள் ஆகியோர் சமூக இடைவெளியோடு பங்கேற்கலாம் என மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோனா, செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# மதுரை மடீட்சியாவின் அச்சு மற்றும் பேக்கேஜிங் தொழில் கண்காட்சி 2024




மதுரை: டிச 13

மதுரை மாவட்ட சிறு, குறுந் தொழில்கள் சங்கம் வருகின்ற 2024 டிசம்பர் 20 முதல் 22 வரை 3 நாட்களுக்கு மதுரை வேலம்மாள் மருத்துவமனை வளாகம், சுற்றுச்சாலை, ஐடாஸ்கட்டர் ஆடிட்டோரியத்தில் பிரிண்ட் அன் பேக் என்ற அச்சு - பேக்கேஜிங் தொழில் கண்காட்சியை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இக்கண்காட்சி இந்திய அரசின் குறு, சிறு, நடுத்தர தொழில்கள் வளர்ச்சி நிறுவனம். (MSME), தமிழ்நாடு தொழில் வணிகத்துறை (DI&C), குறு. சிறுதொழில்களுக்கான வசதியாக்க மையம் (FAME-TN) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSமிஞ்சிளி) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், (EDI) இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, (SIDBI) மற்றும் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி (TMB) ஆகியோர் ஆதரவுடனும், அகில இந்திய மாஸ்டர் பிரிண்டர்ஸ் கூட்டமைப்பு. தமிழ்நாடு மாஸ்டர் பிரிண்டர்ஸ் அசோசியேசன், சிவகாசி மாஸ்டர் பிரிண்டர்ஸ் அசோசியேசன். மதுரை பிரிண்டர்ஸ் அசோசியேசன் மற்றும் மதுரை மாவட்ட ஆப்செட் பிரிண்டர்ஸ் அசோசியனுடன் இணைந்தும் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு 10வது முறையாக இக்கண்காட்சி நடத்தப்படுகிறது.

சமீபத்தில் மத்திய அரசு அறி வித்துள்ள எய்ம்ஸ் மருத்துவமனை, விருதுநகரில் அறிவிக்கப்பட்டுள்ள உணவுத் தொழில்நட்ப பூங்கா மற்றும் இராணுவ தளவாட உற்பத்தி மையம் ஆகிய திட்டங்கள் செயல்பாட்டிற்கு வரும் நிலையில் மதுரை மாவட்டத்தில் துணைத் தொழில்கள் உருவாகும் அதன் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். உணவுத் தேவைகள் அதிகரிப்பு போன்ற காரணங்களினால் அச்சு மற்றும் பேக்கேஜிங் தொழில்களுக்கு அபரிமிதமான வாய்ப்புகள் உருவாகும். மேலும் தற்போது வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப மாற்றங்களின் காரணமாக அச்சுத்துறையில் ஏற்பட்டுள்ள நவீன தொழில் நுட்பங்களை நுகர்வோர்கள் அறிந்து கொள்வதற்கும். தங்களது தொழில்களை நவீன படுத்துவதற்கும் இக்கண்காட்சி நடத்தப்படுகிறது.

கண்காட்சியின் துவக்க விழா 20.12. 2024 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு லடாஸ்கட்டர் ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது. தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் இயக்குனர் ஆர் அம்பலவாணன் I.A.A.S., கண்காட்சியை தொடங்கி வைத்து தொடக்கவுரையாற்றுகிறார். மதுரை மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார் I.A.S கண்காட்சி வழிகாட்டி மலரை வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார். தமிழ்நாடு குறு மற்றும் சிறுதொழில்கள் சங்க பொதுச் செயலாளர் எஸ் வாசுதேவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். மடீட்சியா தலைவர் கோடீஸ்வரன் தலைமை வகிக்கிறார். பிரிண்ட் என் பேக் கண்காட்சித் தலைவர் பொன். குமார் கண்காட்சி பற்றி விளக்கவுரையாற்றுகிறார்.

கண்காட்சி நேரம்

வர்த்தக நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

பொதுமக்களுக்கு : மாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை

அனுமதி இலவசம் . விபரம் வேண்டுவோர் அலைபேசி எண் 99622 20666, 98940 52396, 97896 49634ல் தொடர்பு கொள்ளலாம்.

# வேலூர் கத்தோலிக்க மறைமாவட்டத்தின் புதிய ஆயர் அம்புரோஸ் பிச்சைமுத்துவுக்கு திருநிலைப்பாட்டு விழா

வேலூர் டிச13

வேலூர் மாவட்டம், தொன்போஸ்கோ உயர்நிலைப்பள்ளி வளாகத்தில், அகில உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமையகமான ரோம் அலுவலகத்தில் இருந்து தலைவர் போப் ஆண்டவர் பிரான்சிஸ், வேலூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கத்தோலிக்க மறை மாவட்டத்தின் 7ம் ஆயராக அம்புரோஸ்பிச்சைமுத்து என்பவரை நியமனம் செய்துள்ளார். அவருக்கு டிச9 திங்கட்கிழமை பிரம்மாண்ட (திருநிலைப்பாட்டு ) அபிஷேக திருநிலைப்பாட்டு பெருவிழா நடைபெற்றது.



முன்னதாக திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் ஆயர் இல்லத்திலிருந்து குருக்கள், கிறிஸ்தவர்கள் என ஏராளமானோர் அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து வேலூர் தொன்போஸ்கோ பள்ளி வளாகத்தில் அபிஷேக பெருவிழாவும், அவருக்கு கும்ப மரியாதை செய்யப்பட்டது. இவ்விழாவுக்கு சென்னை மயிலை உயர் மறை மாவட்ட பேராயர் மற்றும் திருநிலைப் படுத்தும் முதன்மை ஆயர் ஜார்ஜ் அந்தோணிசாமி தலைமை தாங்கினார்.

செங்கல்பட்டு மறை மாவட்ட ஆயர் நீதிநாதன், கோவை மறை மாவட்ட ஆயர் தாமஸ் அக்குவினாஸ் ஆகிய இணை ஆயர்கள் முன்னிலை வகித்தனர்.

வேலூர் கத்தோலிக்க மறை மாவட்டத்தின் பரிபாலகரும், நிர்வாகியுமான ஐ.ஜான்ராபர்ட் வரவேற்றனர்.

சென்னை மயிலை முன்னாள் ஆயர் சின்னப்பா உள்ளிட்ட ஆயர்கள் பலர் வாழ்த்தி பேசினர். விழாவில் தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் ஸ்டீபன் அந்தோணி, வேலூர் மறை மாவட்ட மக்கள் தொடர்பு பாதிரியார் ஜேம்ஸ், ஒருங்கிணைப்பாளர் பேட்ரிக் மற்றும் இராசுலூயி, வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்களை சேர்ந்த குருக்கள் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் இருந்து 700க்கும் மேற்பட்ட குருக்கள் இந்தியா அளவில் 40 ஆயர்கள், முதன்மை குருக்கள், இருபால் துறவிகள், கிறிஸ்தவர்கள், சிறப்பு விருந்தினர்களாக வேலூர் மாவட்ட அஇஅதிமுக மாநகர மாவட்ட செயலாளர் எஸ்.ஆர் கே. அப்பு, புறநகர் மாவட்ட செயலாளர் த.வேலழகன், இராணிப்பேட்டை மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம். சுகுமார், வேலூர் மேற்கு பகுதி செயலாளர் நாகு (எ) நாகராஜ், கிழக்கு பகுதி செயலாளர் குப்புசாமி, மாநகராட்சி 45வது வார்டு மாமன்ற உறுப்பினர் எழிலரசன், மாணவரணி மாவட்டத் தலைவர் வி.பி.எம்.குமார் மற்றும் அதிமுகவை சேர்ந்த இருபதிற்கும் மேற்பட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். கிறிஸ்தவர்கள் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பிரார்த்தனை செய்துனர்.

# சோழிங்கநல்லூர் திமுக சார்பில் உதயநிதியின் உதய நாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கல் பொதுக்கூட்டம்

சோழிங்கநல்லூர் டிச13

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 195வது வட்டம், எழில் நகர், மேட்டுக்குப்பம் ,கண்ணகி நகரில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுபிரமணியன் ஆணைக்கிணங்க, நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு உதயநிதியின் உதய நாள் விழாவில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டம் மாலை 6 மணிக்கு கண்ணகி நகரில் 195 வது வட்ட மாமன்ற உறுப்பினர், 195வது வட்டக் கழகச் செயலாளர், நகர அமைப்பு நிலைக் குழு உறுப்பினருமான க. ஏகாம்பரம் தலைமையில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் முன்னிலையில் மகளிர் அனைவருக்கும் 1000க்கும் மேற்பட்டோருக்கு ஹாட் பாக்ஸ் பரிசு பொருட்களை வழங்கி சிறப்பாக நடைபெற்றது.






விழாவில் 15 ஆவது மண்டல குழு தலைவர், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி செயலாளருமான வி.இ.மதியழகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர், முன்னாள் ஒன்றிய பெருந் தலைவர் எம். கே .ஏழுமலை தலைமை கழக பேச்சாளர் கவிஞர் கோலூர் வைரமணி, தலைமைக் கழக பேச்சாளர் கி.ரேஷ்மா சிறப்புரையாற்றினார்கள். வரவேற்பு உரையாக மாவட்ட பிரதிநிதிகள் டீ.கலைச்செல்வன், எம். ஆர். சந்திரபாபு , வட்ட அவைத் தலைவர் ஜே. சம்பத்குமார், வட்ட துணைச் செயலாளர்கள் வி. விஜயகுமார், பி. ஆபு, விஜயா, வட்ட பொருளாளர் ஆர். பூராஜன், பகுதி பிரதிநிதிகள் எஸ்.டி.ராஜகோபால், வி. பாலசுந்தரம், ஜே. குட்டியப்பா, டீ. தேவராஜ், பி. ராஜா மற்றும் இவ்விழாவில் மா. து.செ.மு.ஒ. பெருந்தலைவர் பாலவாக்கம், மு.மனோகரன், மா. இ.அ.து.அமைப்பாளர் கா. வீ. தியாகராஜன், மா.இ.அ. து.அமைப்பாளர் ஜெ.இ. பாண்டியன், மா.மா.அ. அமைப்பாளர், பா.அருண் குமார், மா.இ. அ. அமைப்பாளர், எம். பார்த்திபன், மா.பிரதிநிதி,தா.விஜயபாலன், தொ. தா. தொ.அ.ஒருங்கிணைப்பாளர் கி.ஸ்டாலின் மொழி, மா.பொ. அ.து அமைப்பாளர் ஜே. ராமச்சந்திரன், மா.ம.அ.து .அமைப்பாளர் டி. பத்மினி, மா.க.இ.ப.பே.து.அ, சி. எம். குமார், ப.வ. அணி எ. தமிழரசு, மா.து.அமைப்பாளர் பி. எல் .ஆல்வின், மாமன்ற உறுப்பினர்கள் சங்கர், முருகேசன், பாபு உள்ளிட்ட 195வது வட்ட தி. மு.க.சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி சென்னை தெற்கு மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட நகர திமுக சார்பில் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம்

செங்கல்பட்டு டிச13

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்களை பாதுகாக்கும் இயக்கம்தான் திமுக என்று கூடுவாஞ்சேரியில் நடைபெற்ற உதயநிதிஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசினார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர திமுக சார்பில் தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு உட்பட்ட சார் பதிவாளர் அலுவலகம் அருகில் நடைபெற்றது.




இதில் திமுக நகர கழக செயலாளரும் நகர மன்ற தலைவருமான எம்கேடி கார்த்திக் தண்டபாணி தலைமை தாங் கினார். தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜிஜேந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர் கே.பி.ஜார்ஜ், நகர பொருளாளர் அப்துல்காதர், நகர துணை செயலாளர்கள் ராமமூர்த்தி, ஸ்ரீமதிராஜி, ஹரி, மாவட்ட பிரதிநிதிகள் ரவி, டில்லி, டி.சதீஷ்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் எம்கேபி சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர மன்ற துணை தலைவர் வக்கீல் ஜி.கே.லோகநாதன் அனைவரையும் வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளர்களாக திராவிடர் கழகம் துணை பொதுச் செயலாளர் செ.மெ.மதிவதனி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ. அன்பரசன், இளம் பேச்சாளர் மதன்குமார், செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன், முன்னாள் எம்எல்ஏ மூர்த்தி, மறைமலைநகர் நகர மன்ற தலைவர் ஜெ.சண்முகம், காட்டாங்கொளத்தூர் ஒன்றிய குழு துணை தலைவர் ஏவிஎம் இளங்கோவன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

பின்னர் ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அப்போது அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேசுகையில், வருகின்ற 2026ல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளில் திமுக வெற்றி பெற கட்சி தொண்டர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்ய வேண்டும். 7வது முறையாக திமுக ஆட்சிக்கு வர வேண்டும். தமிழக மக்கள் வளம்பெற வேண்டுமென்றால் திமுக ஆட்சியில் இருக்க வேண்டும். திராவிட மாடல் என்றாலே எதிர் கட்சியினருக்கு வயிறு எரிகிறது. இயற்கை சீற்றங்களை யாராலும் தடுக்க முடியாது. ஆனாலும் தமிழக முதல்வர் மற்றும் துணை முதல்வர் களப்பணியில் ஈடுபட்டு 10 நாட்களில் செய்ய வேண்டிய பணிகளை இரண்டே நாட்களில் செய்து முடித்தனர். இதில் மக்களோடு மக்களாக நெருங்கி பழகும் கட்சிதான் திமுக. திமுக ஆட்சியில் இருந்தா லும், இல்லாவிட்டாலும் மக்களை பாதுகாக்கும் இயக்கம்தான் திமுக. தேர்தல் அறிக்கையில் சொன்னபடி 90 சதவீத பணிகளை நிறைவேற்றி விட்டோம். தற்போது நிதி நெருக்கடி சரியில்லை. இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் சரியாகிவிடும். அப்போது விடுபட்டுள்ள பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமை தொகை 1000 வழங்கப்படும். இந்தியாவிலேயே பசி பட்டினி இல்லாத மாநிலம் எது என்றால் தமிழ்நாடு மற்றும் கேரளா மட்டும்தான் என்றார். முடிவில் 21 வது வார்டு கழக செயலாளர் எஸ்.ஜெகன் நன்றி கூறினார்.

# மதுரை மாநகராட்சி கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்த மேயர்

மதுரை: டிச 13

மதுரை மாநகராட்சி வார்டு எண்.97 திருப்பரங்குன்றம் பெரியரத வீதி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம் மற்றும் திருவள்ளுவர் மகால் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, கிருஷ்ணாபுரம் காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மேயர் இந்திராணி பொன்வசந்த் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைத்தார் .






மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.97 திருப்பரங்குன்றம் பெரியரத வீதி கோட்டை தெரு எதிர்புரம் ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம், மண்டலம் 4 வார்டு எண்.47 திருவள்ளுவர் மகால் மாநகராட்சி உயர் நிலைப்பள்ளியில் திட்டத்தின் கீழ் ரூ.49 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மூன்று கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை திறந்து வைத்து மாணவர்களுடன் கல்வி கற்றல் குறித்து மேயர் கலந்துரையாடினார்கள். மண்டலம் 1 வார்டு எண்.16 கிருஷ்ணாபுரம் காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மேயர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.31 கரும்பாலை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை மாநகர மேயர் தலைமையில் நடைபெற்றது. அப்பள்ளியில் சத்துணவு கூடத்தில் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவுகளை தரமாகவும், சுவையாகவும் வழங்குமாறு மேயர் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், துணை மேயர் நாகராஜன், மண்டலத் தலைவர்கள் சுவிதா, முகேஷ்சர்மா, சரவண புவனேஸ்வரி, கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், உதவி ஆணையாளர்கள் . இராதா, சாந்தி, பார்த்தசாரதி, கோபு, கல்வி அலுவலர் ரகுபதி, மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், உதவி செயற் பொறியாளர்கள் முத்து மயிலேறிநாதன், சுகாதார அலுவலர்கள் சிவ சுப்பிரமணியன், திருமால், பிச்சை, உதவிப் பொறியாளர்கள்மணியன், பொன்மணி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. சிவசக்தி, திருமதி.இந்திரா காந்தி, பானு, ஜெயராஜ், முருகன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS" No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161